# காணிக்கை தரவந்தோம்

காணிக்கை தரவந்தோம் -
தந்தோம் - ( 2 )
எங்கள் சிந்தை மகிழ்வுடன்
தந்தை இறைவனுக்கு
காணிக்கை தரவந்தோம் - தந்தோம்

**1**
கோதுமை மணியும் திராட்சைக் கனியும்
காணிக்கைப் பொருளாய்த் தரவந்தோம்-(2)
உம் திரு மகனின் உடலும் உதிரமும்...
உம் திரு மகனின் உடலும் உதிரமும்
எம் திரு உணவாய்ப் பெறவந்தோம் -(2)
இறைவன் என்றும் போற்றி போற்றி

(காணிக்கை தரவந்தோம் )

**2**
நிலமதன் விளைவும் மானிடர் உழைப்பும்
நன்றியின் பலியாய்த் தரவந்தோம்- ( 2 )
வளமையும் வாழ்வும் நலன்கள் யாவும்....
வளமையும் வாழ்வும் நலன்கள் யாவும்
நின் அருட் கொடையாய்ப்
பெறவந்தோம் - ( 2 )
இறைவன் என்றும் போற்றி போற்றி

(காணிக்கை தரவந்தோம்)